
தொகுதி 1: நல்வாழ்வு

பாடம் 1: பழமும் நாமும்



தொகுதி 1

## நல்வாழ்வு

பாடம் 1

### பழமும் நாமும்

**உரையைச் செவிமடுத்துக் கருத்துகளைக் கூறிடுக.**



எனது அருமை **வாழை, கொய்யா, அன்னாசி, ரம்புத்தான்** நண்பர்களே வணக்கம். இன்று நான் 'நமது வளம் மக்களின் நலம்' என்ற தலைப்பில் உரையாற்ற வந்துள்ளேன்.

நம்மை **உள்நாட்டுப் பழங்கள்** என்றும் அழைப்பர். நம்மிடம் மனித உடலுக்குத் தேவையான சத்துகள் கிடைக்கின்றன. இதனால், அவர்களின் உடல் ஆரோக்கியம் பெறுகிறது.

தோழர்களே, நம் சுவையோ அதிகம்; விலையோ மலிவு. எளிதில் கிடைக்கும் நம்மை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கின்றனர். மக்களின் நல்வாழ்வுக்கு என்றும் துணையாக இருப்போம் என வேண்டி விடைபெறுகிறேன். நன்றி.

1. உரையின் தலைப்பு 'நமது வளம் மக்களின் ____________.

2. பழங்கள் சாப்பிடுவதால் உடல் ________________ பெறுகிறது.

3. வாழை, கொய்யா, அன்னாசி, ரம்புத்தான், பப்பாளி போன்றவை __________________ பழங்கள் ஆகும்.

4. உள்நாட்டுப் பழங்களின் __________ அதிகம்; விலை ___________.

5. உள்நாட்டுப் பழங்களை வெளிநாடுகளுக்கு ________________ செய்கின்றனர்.

| | | |
|---|---|---|
| சுவை | ஏற்றுமதி | மலிவு |
| உள்நாட்டுப் | ஆரோக்கியம் | நலம் |